**FRIDAY SERMON/ வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா**

**19 May 2017 (22 Shabaan 1438 Hijira)**

# The Fine Line Between Good and Evil

## நன்மை - தீமைக்கு நடுவிலான அழகான கோவை



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

**ச**லாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

**“(தன்னை) அஞ்சி நல்லறங்கள் செய்வோருடனே அல்லாஹ் இருக்கின்றான்”**

(16 – 129)

சந்தேகமில்லை! அல்லாஹ் **“தக்வா”**யுடையோர்களின் கூடவேயிருக்கின்றான். அதாவது நல்லொழுக்கமுடையவர்களிடம் என்று கூறினால் **தக்வா**வை விட மேன்மையான செயல்கள் புரிகின்றோர்களே அவர்கள். அதாவது அவர்கள் நல்லியல்புடையவர்கள். அவர்கள் எப்போதும் நன்மைசெய்ய ஆர்வமிக்கவர்களும் மனுகுலத்திற்கு சேவை புரிகின்றோர்களுமாவார்கள்.

**“தக்வ”** என்ற வார்த்தையின் பொருள் தவறுகளிலிருந்து விலகி நிற்கல் என்றாகும். அந்நிலையில் அவர்கள், தங்களை சுற்றியிருக்கும் நல்வட்டாரத்திற்குள்ளிலிருந்து வெளியேறிக் கொள்பவர்களல்ல. நினைவு கொள்ளுங்கள், ஒருவர் பிறரின் உரிமைகளை பறித்துக் கொள்ளவில்லை என்றிருந்தாலும், எவருடைய சொத்தை அவர் திருடிக் கொள்ளவுமில்லை. பொய் கூறவுமில்லை. விபசாரம் செய்யவுமில்லை என்றிருந்தாலும், அவருக்கு சுயம் தம்மை நல்லவன் என கூறிக்கொள்ள முடிவதில்லை. ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் உங்களுக்கு தடைசெய்யப்பட்டிருக்கும் நபரிடம் அன்பு வார்த்தைகள் மூலம் பேசிக்கொள்ளும் பொழுதும் அவர் விபசாரம் எனும் பாவத்தின்பால் வீழ்ந்துவிடலாம். நீங்கள் நன்கு நினைவுகொள்ள வேண்டும், அவ்வகை பருமாற்றங்கள் ஒரு பாவமாக பரிணமித்துக் கொள்ளலாம். காரணம் சாத்தான் தனக்கு கிடைக்கும் எந்தஓர் சிறிய வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்கின்றான். ஒவ்வொரு நம்பிக்கையாளரும் அவர்கள் ஆணாகயிருந்தாலும் சரி, பெண்ணாகயிருந்தாலும் சரி, இந்த கொடூரமான பாவத்திலிருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு கவனமுடையவர்களாகயிருங்கள். ஆணையும் பெண்ணையும் திருக்குர்ஆன் அறிவுறுத்துவதை போன்று சுயம் தங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**“நீங்கள் இறையச்சத்தோடு இருக்க விரும்பினால் பேச்சில் நளினம் காட்டாதீர்கள். ஏனென்றால் எவன் உள்ளத்தில் நோய் இருக்கின்றதோ அவன் ஆசை கொள்வான் இன்னும் நீங்கள் நல்ல பேச்சே பேசுங்கள்” (33 : 33)**

அவ்வாறு நளினமாக பேசிக்கொண்டால் அது ஒரு பெரிய பாவத்தின் பால் அதாவது அது விபசாரத்தின் ஆரம்பமாகிவிடலாம். இது அல்லாஹ்வின் நோக்கத்தில் மிக கௌரவம் வாய்ந்த விஷயமாகும். இதற்கான தண்டனை மிக கடுமையானதாகயிருக்கும். அதனால் தான் இதற்கு எவ்வித மன்னிப்புமில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்.

**“நிச்சயமாக முஸ்லீம்களான ஆண்களும் பெண்களும், நன்னம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும், இறை வழிபாடுள்ள ஆண்களும் பெண்களும், உண்மையே பேசும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும், அல்லாஹ்விடம் உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண்களும்**

**பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும், தங்கள் வெட்கத்தலங்களை காத்துக் கொள்ளும் ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும் பெண்களும், ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கின்றான்" (33 : 36)**

தீய செயல்களிலிருந்து விலகி நின்று மேலும் நற்செயல்கள் புரிகின்றோர்களிடமே அல்லாஹ் இருக்கின்றான் என கூறுவதும் அக்காரணத்தினாலாகும். பெரும்பாலான மக்களும் நாங்கள் நம்பிக்கையாளர்கள் என்றும் உண்மையாளர்கள் என்றும் சுயம் எண்ணிக் கொள்கின்றனர். ஆனால் விண்ணுலகில் அவர்களை அவ நம்பிக்கையாளர்கள் என்றே கருதப்படுகின்றது. ஒரு உண்மையான நம்பிக்கையாளர் எல்லா நிலையிலும் நேற்மையாளராகயிருந்தால் அவரை விண்ணுலகில் நாணயமானவர் என எண்ணப்படுகின்றது. மண்ணுலகில் அவரை ஒரு காபிர் என முத்திரையிடப்பட்டிருந்தாலும் சரி, ஒரு அவநம்பிக்கையாளர் என கருதப்பட்டிருந்தாலும் சரி! ஆனால் அந்த உன்னதமான நம்பிக்கையின் நிலையினை அடைந்துவிடுதல் என்பது அதாவது பரிபூரணமான நம்பிக்கையாளராக பரிணமித்துக் கொள்தல் என்பது இறைவனிடம் முழுமைபெற்றதும் களங்கமற்றதுமான நம்பிக்கையை வைத்துக் கொள்ளும் பொழுதாகும். நிச்சயமாகவும் அது மிக வருத்தத்திற்குரிய ஒரு விஷயமாகும். மிக ஆழமான நிலையிலும் களங்கமற்றவகையிலும் ஒருவர் அல்லாஹ்வின் மீதான உண்மையான நம்பிக்கையில் எட்டிவிட்டால், அச்சூழ்நிலையில் அவரது உண்மையான நம்பிக்கையும் களங்கமின்மையும் பகுத்தறிந்துக் கொள்வதற்க்காக ஏராளமான சோதனைகளை அவருக்கு எதிர் கொள்ள வேண்டியதாகயிருக்கும்.

அல்லாஹ்வின் அருளால் **ரமலான்** மாதம் வந்தடைந்துக் கொண்டிருக்கின்றது. நீங்கள் ஒவ்வொருவரும் முடிந்தவரையில் நற்செயல்களில் ஈடுபட்டுக் கொள்ளுங்கள். அது வாயிலாக அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுக் கொள்ள வேண்டும். இன்ஷா அல்லாஹ்!

இவ்விஷயத்தை நீங்கள் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். அதாவது கெட்ட செயல்களிலிருந்து ஒருவர் விலகி நிற்பதால் மட்டும் அவர் மிக நல்ல விஷயங்கள் செய்தார் என எண்ணப்படுவதில்லை. மாறாக கெட்ட விஷயத்தில் நின்று விலகிநிற்பதோடு நல்ல செயல்களும் புரிந்திட வேண்டும். நான் மேல் கூறியது போன்று ஏராளமான மக்கள் விபசாரத்தில் ஏற்பட்டுக் கொள்ளாமல் இருக்கின்றனர். விபசாரத்திற்கு பல முகங்கள் உள்ளன. உதாரணமாக பிரியமானவர்களிடத்தில் நகைச்சுவையை கொண்ட வார்த்தைகளால் பேசிக்கொள்தல். ஆரம்பத்தில் அது முற்றிலும் ஒரு நட்புப் பேச்சாகமட்டுமிருக்கும். அதை தொடர்ந்து நான் உன்னை நேசிக்கின்றேன் என்ற நிலையினை அடைகின்றது. மேலும் அது ஆபாசவார்த்தைகளிலும் படங்களிலும் வீடியோக்களிலும் எட்டிவிடுகின்றது. அதை ஒன்றுக்கொன்று அவர்கள் பகிர்ந்துக்

கொள்கின்றனர். அதைபோன்றே அவ்வகை பந்தம் சிலவேளை கொலையின் பால் செல்கின்றது. கொலை செய்தப்பின் அவரின் சொத்துக்களை கைவசப்படுத்திக் கொள்கின்றனர். அது அவரை மேலும் திருட்டின்பாலும் கொள்ளையின்பாலும் கொண்டு செல்லலாம். இவ்வகை செயல்கள்யாவும் இறைவனுமாக தொடர்புடையதல்ல, மனுகுலத்திற்கு சேவை புரிவதுமல்ல. இத்தகை ஆட்கள் பிறரின் இதயங்களில் பகைமையை முளைக்கசெய்பவர்கள் ஆவார்கள்.

அவர்கள் பிறமக்களை வெறுப்போர்களும் இரக்கம் காட்டிக்கொள்ளாதவர்களும் ஆவார்கள். அவர்கள் பிறமக்களை தாழ்ந்தவராக மட்டும் காண்கின்றனர். மற்று மக்களில் மேன்மையுடையவர்கள் இருந்தால் கூட, அவர்கள் மட்டுமே மக்களில் உன்னதமானவர்கள் என்றும் அவர்கள் மட்டுமே சரியான வழியில் இருக்கின்றவர்கள் என்றும் எண்ணுகின்றனர்.

ஆகவே இவ்வகை நபர்கள் பெரிய பாவங்களாகிய விபசாரத்திலும் கொலையிலும் உட்படாமலிருந்தாலும் அவர்கள் அல்லாஹ்வின் பாதையை மறந்துவிடுகின்றனர். இறைவனுக்கு திருப்தியான ஒரு செயல்களும் அவர்கள் செய்வதில்லை. மனுகுலத்திற்கும் அவர்கள் எவ்வித சேவையும், எந்த நன்மையும் செய்வதில்லை. ஒரு அறிமுகமில்லாத நபர், ஒருவேளை இவ்வகை செயல்கள் (திருட்டு, கொலை, விபசாரம்) செய்யாதவர்களை நல்லவர்கள் என எண்ணிக் கொள்ளலாம். காரணம் இவ்வகை செயல்களை மிக மோசமான இயல்பாக எண்ணப்படுகின்றது. இத்தகை மோசமான செயல்களை செய்யாமலிருக்கின்றார் என்ற காரணத்தால் அவ்வகை ஆட்களை **“இறைவனின் நேசர்கள்”** என்று கூறமுடியாது. மோசமான செயல்களில் ஈடுபடுகின்றோர்கள், திருடுகின்றவர்கள், வஞ்சகம் செய்வோர்கள், லஞ்சம் வாங்குவோர்கள் கொடுப்பவர்கள் போன்ற ஆட்கள் இவ்வுலகில் வைத்து தான் இறை நீதிப்படி இறை தண்டனைக்கு ஆளாக்கப்படுவார்கள். அத்தகை நபர்கள் தண்டனைகளுக்கு ஆளாக்கப்படாதவரையில் மரணிக்கமாட்டார்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், பெரிய பாவங்களில் இருந்து விலகி நிற்கின்றோம் என்பதால் மட்டும் ஒருவர் நன்மை செய்கின்றார் என்று எண்ணயியலாது.

**“தக்வ” என்பது தாழ்ந்த ஒரு பதவியாகும். இதை ஒரு உதாரணம் வழியாக விளக்கிக் கொள்ள முடியும். அதாவது முற்றிலும் சிறந்த உணவுப் பொருட்களை வைத்துக் கொள்வதற்கு ஒரு பாத்திரத்தை மிக நல்ல முறையில் கழுகி சுத்தம் செய்தோம் என எண்ணுவோம். ஆனால் அதில் நல்ல உணவு பொருட்களை விளம்பிக் கொள்ளவில்லையென்றால் அதனால் ஒருவரின் பசி தணிந்துக் கொள்ளுமா? நிச்சயமாகவும் இல்லை. இதுவே “தக்வா” வின் விஷயமும். தக்வா என்றால் என்ன? அது பாத்திரத்தைக் கழுகி சுத்தம் செய்வது போலாகும். ஆனால் அதில் குடிகொள்வது “நப்ஸே அம்மாறா”யாகும் (தீமையின்பால் தூண்டிக் கொள்ளும் ஆன்மா)**

இத்துடன் நான் இந்த குத்து.ஃபாவை நிறைவுபடுத்துகின்றேன். என் தோழர்களே! இந்த பேருரையை உணர்ந்துக் கொள்ள நீங்கள் முயற்ச்சியுங்கள் உங்களின் செயல்களில் நீங்கள் கவனமுடையவர்களாகயிருங்கள் நேர்மையான நம்பிக்கையாளர்களின் உள்படையும் வெளிப்படையுமான அனைத்து இயல்புகளும் உங்களில் உருவாகி கொள்வதற்கு நான் **"துவா"** செய்கின்றேன். அல்லாஹ் உங்கள் அனைவரையும் மன்னிப்பானாக! அவ்வகை நம்பிக்கையாளர்கள் எல்லா நிலையிலும் அல்லாஹ்வின் அருகாமையை உண்மையில் அடைந்துவிடுவார்கள். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.


**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817